# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தீங்கட்கிழமை 08.11.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







## கிழக்கில் கோரோனா தோற்று அதிகரிக்கும் அபாயம்



(சுபீட்சம் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கோவிட் 19 கொரோனா நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 55 ஆயிரத்தையும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் கடந்ததாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம். தௌபீக் தெரிவித்தார். விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்

செப்டம்பர் மாதத்தின் இறுதி பகுதியில் கிழக்கில் ஆயிரம் புதிய கொரோனா நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ள நிலையில் ஒக்டோபர் மாதத்தில் இவ் வெண்ணிக்கை 800 தொடக்கம் 600 ஆக குறைந்து காணப்பட்டாலும் ஒக்டோபர் மாதம் இறுதி வாரத்தில் 700 கொரோனா நோயாளியாகவும் அதிகரித்து காணப் பட்டது.

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கம் தொடர்பில் திஸ்ஸவின் கவலை

(காந்தன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை தான் உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கூட்டணிக் கட்சிகளை கவனத்தில் கொள்ளாது செயற்பட்டு வருகிறது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை என்றால்,

02 ஆம் பக்கத்தில்...

## ஒட்டு மோத்த இந்த அரசையுமே கோளுத்தி வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்



(க.கிஷாந்தன்)

'விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்.' என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் முற்போக்கு கூட்டணி போகவந்தலாவையில் போராட்டம்



(க.கிஷாந்தன்)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணியால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவை நகரில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதய குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும்

02 ஆம் பக்கத்தில்...

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நியமனத்தை ஏற்றுக்கோள்ள முடியாது



(மட்டுநிருபர்)

காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை காணாமலாக்கப்பட்டவர் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி நியமித்துள்ளமையை ஏற்க முடியாதென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர்

02 ஆம் பக்கத்தில்...

## ஒரு நாடு, ஒரே சட்டம் ; வத்திக்கான் கவனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட 'ஒரு நாடு, ஒரே சட்டம்'தொடர்பான ஜனாதிபதி செயலணி குறித்து வத்திக்கான் கவனம் செலுத்தியுள்ளது.

வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்படும் செய்தி இணையத்தளமான Vatican News, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற தலைப்பில் ஜனாதிபதி செயலணி குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் இது குறித்து தெரிவித்துள்ளது. 'ஒரே நாடு - ஒரே சட்டம்'

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையை சிங்கள பேளத்த நாடாக நிறுவுவதற்கான முயற்சி

(ஊர்காவலன்)

அரசாங்கம் தனது அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்று திரட்டி, இலங்கையை சிங்கள பௌத்த நாடு என நிறுவுவதற்கான முயற்சி செய்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அதன்பிரகாரம் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களில் பௌத்த சிதைவுகள் இருப்பதாக கூறி முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வாராய்வுகள் இதற்கு முக்கிய சான்று என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெடுக்குநாறி மலையில், காரைநகர் பகுதி என வடக்கு கிழக்கில் பல பகுதிகளிலும் பௌத்த சின்னங்களும் சிதைவுகளும் இருப்பதாகக்கூறி தொல்பொருள் திணைக்களத்தினால் அகழ்வாராய்வுகள்

02 ஆம் பக்கத்தில்...






## காதில் ஹேட்போன்: ரயிலில் மோதி இளைஞன் பலி



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கொழும்பிலிருந்து இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் (நேற்று07) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு ரயிலில் மோதி விபத்துக்குள்ளானவர் முள்ளிப்பொத்தானை 95ஆம் கட்டை சதாம் நகரை சேர்ந்த ஹமீத் முபீத் (20வயது) திருமணமனவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது...

நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று முள்ளிப்பொத்தானை புகையிரத நிலையத்தில் இருந்து சிறிது தூரத்தில் சக நண்பர் மேலும் ஒருவருடன் கதைத்து கொண்டிருக்கும்போது விபத்துக்குள்ளான

02 ஆம் பக்கத்தில்...









## 'பட்ஜெட்டில் நிவாரணம்' கிடைக்காது

(காந்தன்)

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பெரிய எதிர்ப்பார்ப்புகள் இல்லையெனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென தான் எதிர்ப்பார்க்கின்றேன் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் தொகுதிக் கூடத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த வரவு செலவுத்திட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...




## ‘பட்ஜெட்டில் நிவாரணம்’ கிடைக்காது

பாரிய நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது என்றார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும் என்பது ஏமாற்று நடவடிக்கையாகும். அதனூடாக எந்தவொரு நிவாரணத்தையும் எதிர்பார்க்கமுடியாது என்றார்.

பட்ஜெட் என்பது நத்தார் தினத்தன்று வரும் நத்தார் தாத்தா வழங்கும் சீனிபோல மாதிரியானது என மக்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் தவறானதாகும். மக்களின் அவ்வாறான தவறான சிந்தனைகளால்தான், நாடு இவ்வளவு மோசமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையை சிங்கள பௌத்த நாடாக நிறுவுவதற்கான முயற்சி

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் கடந்த காலங்களில் வரலாற்றாசிரியர்களாலும் தொல்லியலாளர்களாலும் நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்வுக்குச் சமளவிலான ஆய்வுகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் குறித்த தொல்லியல் சான்றுகளையும் ஆதாரங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்குப் பலரும் தயங்கும் நிலையில் இவ்விடயங்கள் குறித்தும் கரிசனை கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டார்.

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள

இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்தும் கருத்து வெளயிட்ட அவர், இந்த அரசாங்கமானது பொய்யான ஒரு அரசாங்கம். அனைத்து விடயங்களிலும் பொய்யும் ஊழலும் மோசடியும் மக்களுக்கு சுதந்திரமில்லாத ஒரு மோசமான அரசாங்கத்தின் அமைச்சர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்று அனைவருக்கும் தெரியும்.

ஜனாதிபதி தொடக்கம் பிரதமர், அமைச்சர்கள் பொய்களை சொல்லும் நிலைபாடே காணப்படுகின்றது. வியாபார நோக்குடனும் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தேன். அவற்றில் எதனையும பூர்த்திசெய்யாமல் சிறிய ஒரு விடயத்தினை மட்டும் செய்துவிட்டு அதற்கொரு மாபெரும் திறப்பு விழாவினை செய்துவிட்டு சென்றிருந்தார்.

இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினை ஜனாதிபதி நியமித்துள்ளதாக செய்திகளில் பார்க்ககூடியதாகவுள்ளது. கடந்த காலத்தில் கடத்தல், காணாமல்போதல் சம்பவங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி குழுவுக்கும் தொடர்பிருப்பதாக பல்வேறு நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை நியமித்தது ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் உள்ள மீனவர்களின் பிரச்சினையை பார்க்கமுடியாத அமைச்சர் எவ்வாறு அந்தமானில் உள்ள மீனவர்களைப்பார்க்கப்போகின்றார். எந்தவொரு விடயத்திலும் அமைச்சர் டக்ளஸ் மீது நம்பிக்கைவைக்கமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு நாடு, ஒரே சட்டம் ; வத்திக்கான் கவனம்

என்ற தலைப்பில் செயலணியின் உறுப்பினர்களை பெயரிடும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்து, அனைத்து குடிமக்களும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ திட்டத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக புதிய அரசியலமைப்புச்சட்டத்தை உருவாக்குமாறு இலங்கை ஆயர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வத்திக்கான் செய்தி இணையத்தளம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம், அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச, 13 பேர் கொண்ட அரச தலைவர் செயலணியை நியமித்து, ‘கடுமையான பௌத்த பிக்கு ஒருவரின்’ தலைமையில், இந்த யோசனையை ஆய்வு செய்து சட்டமூலமொன்றை உருவாக்கினார். இலங்கையின் பெரும்பான்மை பௌத்த சமூகத்தின் ஆதரவுடன் 2019 ஆம் ஆண்டு அரச தலைவராக தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்சவின் தேர்தல் முழக்கம் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற கருத்துருவாக இருந்ததாக வத்திக்கான் செய்தி இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஞானசார தேரர் இலங்கையில் சர்ச்சைக்குரிய நபர் என ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறித்தும் வத்திக்கான் செய்தி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் அவரது பொதுபல சேனா அமைப்பு ஈடுபட்டதாகவும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக கடந்த ஆண்டு அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட சில மாதங்களில் மன்னிக்கப்பட்டார் என்று வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ‘ஒரு நாடு ஒரே சட்டம்’ தொடர்பான அரச தலைவர் செயலணியில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமையும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

## காதில் ஹெட்போன்: ரயிலில் மோதி இளைஞன் பலி

நபர் தொலைபேசியில் ஹெட்போன் அணிந்தவாறு பேசிக்கொண்டிருந்ததாகவும் சக நண்பர்கள் புகையிரதம் வருவதை அவதானித்து கூச்சலிட்டதாகவும் ஹெட்போன் அணிந்திருந்தமையினால் அவருக்கு சரியாக கேட்காத நிலையில் இருவரும் அவரை நோக்கி ஓடிய போதும் ரயில் வேகமாக அவரை மோதியதாகவும் சக நம்பர்கள் தெரிவித்தனர்.

மேலும் விபத்துக்குள்ளானவரின் தலை துண்டிக்க பட்ட நிலையில் சடலம் கந்தளாய் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் முற்போக்கு கூட்டணி பொகவந்தலாவையில்

போராட்டத்தில் பங்கேற்று, விலையேற்றத்தைக் கண்டித்தனர். இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, பொகவந்தலாவை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் இன்று மூடப்பட்டிருந்தன.

‘அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடனடியாக குறைக்கவும். வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும். அதற்கான விசேட பொறிமுறை அவசியம்.’ எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

## அரசாங்கம் தொடர்பில் திஸ்ஸவின் கவலை

மாற்று பயணம் குறித்து சிந்திக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பண்டாரவளையில் நேற்று லங்கா சமசமாஜக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் திஸ்ஸ விதாரண இதனை குறிப்பிட்டுள்ளார்.

கூறுவதற்கு கவலையாக இருக்கின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் எம்மை கவனத்தில் கொள்வதில்லை. உதாரணமாக ஒகஸ்ட் பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதியோ, பிரதமரோ கூட்டணிக் கட்சித் தலைவர்களான எங்களை அழைத்து கூட்டத்தை நடத்தவில்லை.

வெட்டு, குத்து அரசியல் நடப்பதால், அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகளின் 11 தலைவர்கள் வாரம் ஒரு முறை சந்தித்து மக்களின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி எம்மால் முடிந்ததை செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எமது அழுத்தங்களுக்கு அமைய அரசாங்கம் செயற்பட்டால், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அப்படி செய்யவில்லை என்றால், நாங்கள் வேறு பயணம் குறித்து சிந்திக்க நேரிடும் எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கில் கொரோனா தொற்று அதிகரிக்கும்

அம்பாறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவதை காணகூடியதாக இருந்தாலும் ஏனைய பகுதிகளிலும் சிறிது குறைந்து இருந்தாலும் அது கடந்த மாத இறுதிப்பகுதியில் சற்று அதிகரித்து காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பு மருந்து வழங்கும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கும் நிலையில் முதலாவது தடுப்பூசி 20 வயதுக்கு மேற்பட்டோரில் 93 சதவீத மாணவர்களுக்கும் இரண்டாம் கட்ட தடுப்பூசி 82 சத வீதமாணவர்களுக்கும் 16 தொடக்கம் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு 93 சத வீதம் பைசர் கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளதுடன் முன்னிலை உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் பைசர் தடுப்பு மருந்து வழங்கும் செயற்பாடுகளும் நடைபெற்று வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்

நாட்டினுடைய பொருளாதார நிலை எமது அன்றாட நடவடிக்கையில் பல தளர்வுகள் ஏற்படுத்தியுள்ளது அதனை நாம் சாதாரண நிலை என கருத்தில் கொண்டு கொரோனா தொற்று எம்மை விட்டு நிரந்தரமாக நீங்கி விட்டது என நினைத்துக்கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வது மேலும் ஒரு புதிய கொரோனா கொத்தணியொன்றினை உருவாக்கும் அச்சம் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளது

புதிய வகையான கொரோனா வைரஸ் ஆதிக்கத்தினால் இது பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என எதிர்வு கூறப்படுகின்றது சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் கட்டுப்பாடுகள் பூர்ணமாக கடைபிடிக்கப்படுவதிலிருந்து ஓரளவு நாம் மீள கூடியதாக இருக்கும் இதனால் எமது தேவையற்ற ஒன்று கூடல்களை இயன்ற வரை தவிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் உள்ளோம்

விசேடமாக திருமண வைபவங்கள்,மரண சடங்குகள்,சமய வழிபாடுகள் மற்றும் குடும்ப ஒன்றுகூடல்கள் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களிற்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும் முகக் கவசங்களை சரிவர அணிவதும்,சமூக இடைவெளியை முறையாக பேணுவதும் கட்டாயமாகும் இவ்வாறான செயற்பாடுகள் எல்லை மீறும்போது நோயாளிகளின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரிக்க வாய்ப்புண்டு அத்துடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

## ஒட்டு மொத்த இந்த அரசையுமே கொளுத்தி

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று (07.11.2021) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

‘கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு கடன் கொடுத்தன. அந்நாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசுக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யபோவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அறிவித்துள்ளார். மஞ்சளுக்கு தடை விதிக்கப்பட்டது. நாட்டில் தற்போது மஞ்சள் இருக்கின்றதா? பாசி பயறு, உளுந்து உள்ளிட்ட பொருட்களும் இல்லை. அரசு தோல்வி கண்டுள்ளது.

விவசாய அமைச்சரின் மட்டுமல்ல இராஜாங்க அமைச்சரின் கொடுப்பாவியையும் எரிக்க வேண்டும் என்கின்றனர். இவ்விருவரின் மட்டுமல்ல ஒட்டு மொத்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு அனுப்பவேண்டும்.

எமது பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வேண்டும். யாரோ பெத்த பிள்ளைக்கு, யாரோ பெயர் வைப்பதுபோல தமிழ் முற்போக்கு கூட்டணியால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்கு சிலர் இன்று பெயர் வைக்கின்றனர்.’ என்றார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

## கிழக்கு கல்வி அமைச்சில்...

# பதவி நிலை உத்தியோகத்தர் பற்றாக்குறைவினால் பணிகள் மந்தம்

## தென்கிழக்கு கல்விப் பேரவை ஆளுநருக்கு மகஜர்

**( அஸ்லம் எஸ்.மௌலானா)**

கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக வேலைகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ள தென்கிழக்கு கல்விப் பேரவை இது குறித்து

கிழக்கு மாகாண ஆளுனர் உடனடியாக அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து பேரவையின் தலைவர் ஏ.எல்.எம்.முக்தார் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் செயலாளரைத் தவிர சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரும் உதவிச் செயலாளர்கள் இருவரும் கடமையில் இருக்க வேண்டும். ஆனால் தற்போது இந்த அமைச்சில் ஒரு



சிரேஸ்ட உதவிச்செயலாளரும் ஒரு உதவிச் செயலாளரும் ஒரு பதில் உதவிச் செயலாளரும் கடமையில் உள்ளனர். நிருவாக ஏற்பாடுகளுக்கமைய ஒரு விடயம் உதவிச் செயலாளர் ஊடாக சிரேஸ்ட உதவி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் செயலாளருக்கு இறுதி ஒப்பத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. ஆனால் தற்போதைய சிரேஸ்ட உதவிச் செயலாளர் ஒரு சட்டத்தரணி என்பதனால் கல்வி அமைச்சு சார்பில் நீதிமன்றம், மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் ஆஜராகி வருகிறார்.

அதேவேளை கடமையில் உள்ள ஒரு உதவிச்செயலாளர் அமைச்சுக்கு சமுகமளிப்பதில் அக்கறையின்றி உள்ளார். இந்த நிலையில் கல்வி அமைச்சின் பணிகள் யாவும் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளது.


எனவே, கிழக்கு மாகாண கல்வியமைச்சில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலை உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும். அதற்காக அமைச்சில் தங்கியிருந்து கடமையாற்றக் கூடிய சிரேஷ்ட உதவிச் செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஒருவரும் நியமனம் செய்யப்பட வேண்டும் என ஆளுநரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சட்டத்தரணி ஜெமீல் எழுதிய வணிகம் விதானம் நூல் உயர் கல்வி பாடவிதானத்தில் உள்வாங்கப்பட வேண்டிய ஒன்றாகும்

## பேராசிரியர் எஸ் குணபாலன் தெரிவிப்பு







**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம். எஸ். எம். ஜெமீல் எழுதிய 'வணிக விதானம்' நூல் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். இதனை இலங்கையின் கல்வி பாடவிதான திட்டங்களில் உள்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியும் பேராசிரியருமான எஸ். குணபாலன் தெரிவித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணியும், முன்னாள் மேல் நீதிமன்ற ஆணையாளரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளருமான மருதமுனையை சேர்ந்த எம்.எஸ்.எம்.ஜெமீல் எழுதிய 'வணிக விதானம்' நூல் வெளியீட்டுவிழா (06) மாலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் மருதூர் கனி ஞாபகார்த்த மருதமுனை பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த கருத்தை தெரிவித்தார் இங்கு தொடர்ந்து உரையாற்றும் போது, இந்த நூல் வியாபார முகாமைத்துவத் துறையில் வணிக சட்டத்தை ஒரு பாடமாக கற்கின்ற மாணவர்களுக்கு முக்கியமான ஒன்றாகும்.



வணிக சட்டத்தை ஒரு பாடமாக கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு தமிழ் மொழியில் சரியாக விளங்கிக் கொள்வதற்கான புத்தகங்கள் இலங்கையில் மிக குறைவாகும்.

சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழகத்துக்கு வெளியிலும் விரிவுரையாளராக கலந்துகொண்டு கற்பிக்கின்ற சகோதரர் சட்டத்தரணி ஜெமீல் இன்று இந்த புத்தகத்தை வெளியிட்டு இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இது மாணவர்களுக்கு மாத்திரமன்றி வணிக சட்டத்தைப் பற்றி அறிந்து கொள்கின்ற எல்லோருக்கும் தேவைப்படும் ஒரு புத்தகமாகும்.

குறிப்பாக பல்கலைக்கழகங்கள், சட்டக் கல்லூரிகள், உயர் தொழில் நுட்ப கல்லூரிகளில் வணிக சட்டத்தை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மிகவும் தேவைப்பாடு உள்ள ஒரு நூலாகும். இதனை இலங்கை கல்வி பாட விதானங்களில் இணைக்கப்படுகின்ற போது, மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு மிகச் சிறந்த ஆளுமை கூடிய, ஆற்றல் கூடிய மாணவர்களாக வருவார்கள். பாடசாலைகளில் வணிக சட்டத்தின் அடிப்படை விடயங்கள் போதிக்கப்படுவது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு சிக்கல்களுக்கு விடை காண்பதற்கும் வழி காட்டுவதற்கும் இந்த நூல் மிக முக்கியமான ஒன்றாகும். எமது பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கூட இலங்கை கல்வி கொள்கை மறுசீரமைப்பு குழுவில் ஒரு அங்கத்தவராக இணைக்கப்பட்டு இருக்கிறார். எனவே எதிர் காலங்களில் இவை பற்றிய கருத்துக்களை, முன்மொழிவுகளை எடுத்துச் சென்று கல்வி மறுசீரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். பல்கலைக்கழகங்களில் வணிகவியல் சட்டத்தை ஒருபாடமாகக் கற்கும் மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரிகளிலும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் வணிகவியல் சட்டத்தை ஒரு பாடமாக கல்விகற்கும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் நலன் கருதி இப்புத்தகம் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியதுடன் நூல் ஆய்வுரையை சிரேஷ்ட

இந்த நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடதிபதி கலாநிதி. சித்தி சபீனா ஹசன், சிறப்புரையாற்றினார். இதில் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப், கலாநிதி. ஏ.எம்.எம்.நவாஸ் உட்பட பல்கலைக்கழக பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் ஊர் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தொழிலதிபர் முபாறக்குக்கு கலாநிதி பட்டம்



**(சகாதேவராஜா)**

இளம் முயற்சியாண்மை தொழிலதிபர் மற்றும் சமூக சேவை என்பற்றிக்கு ஐக்கிய அமெரிக்காவின் உலக தமிழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தினை சாய்ந்தமருது வர்த்தகர் சங்க தலைவரும் முபாறக் டெக்ஸ்டைல்ஸ் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான எம்.எஸ்.எம்.முபாறக்கிக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க உலக தமிழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆடை வியாபாரத்துறையில் சுமார் 30 வருட காலமாக கிழக்கிலங்கை மக்களுக்கு வழங்கி வரும் வர்த்தக சேவையினையும் பொதுமக்களின் தேவைகள் மற்றும் அனர்த்தங்களின் போது வழங்கும் பங்களிப்புக்கள் என்பவற்றிக்காக இக்கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஏழ்மையை வெற்றி கொண்டு முபாறக் டெக்ஸ்டைல்ஸ் நிறுவத்தின் மூலமாக தனக்கான தனி அடையாளத்தினை இத்தரணியில் பதித்துக்கொண்ட எம்.எஸ்.எம்.முபாறக், மருதூருக்கும் தனது நிறுவனத்தினூடாக பெருமை சேர்த்துள்ளார்.

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத்தின் தலைமைப் பதவியினை பொறுப்பேற்ற முபாறக் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளார். அத்துடன் பல மனிதாபிமான உதவிகளையும் தனது நிறுவனத்தினூடாக செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கந்தப்பளை வெள்ளம் தடுப்பதற்கு நடவடிக்கை

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான வேலைத் திட்டத்தை அறிமுகம் செய்தல். டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் கருத்தரங்கு நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் வெள்ளிக்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியானது Zoom Technology ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள இந்த டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான வேலைத்திட்டம் பெறப்பட்டு அறிமுகப்படுத்தப் பட்டது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் அதிகாரிகள் மற்றும் இணைய விநியோக முகவர் பிரதிநிதிகள் Zoom Technology ஊடாக இணைக்கப்பட்டதுடன், நுவரெலியா மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகள் குழுவொன்று மாவட்ட செயலக அதிசய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

# அம்பாறையில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாபெரும் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் மருதமுனை றைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கிளப் ஏற்பாடு செய்த 'வீதி விபத்துக்களை தவிர்ப்போம் உயிர்களை காப்போம்' எனும் தலைப்பில் நடைபெற்ற மாபெரும் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி சனிக்கிழமை காலை மருதமுனை பிரதான வீதியில் ஆரம்பமாகியது. இரண்டாம் நாள் பொத்துவிலில் இருந்து கல்முனை நோக்கி வந்தனர் இவர்களை கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை வைத்தியர அதிகாரிகள் வரவேற்றதுடன் இங்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்த விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டவர்கள் கல்முனை - பொத்துவில் பிரதான வீதி வழியாக பொத்துவில் வரை சுமார் 150 கிலோ மீட்டர் தூரம் சென்றனர். பிரதான வைத்தியசாலை முன்றல்கள் மற்றும் நகர்புற பகுதிகளில் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு பொதுமக்களுக்கு வீதி விபத்துக்களை தடுக்கும் வழிமுறைகள் பற்றிய அறிவுறுத்தல் துண்டு பிரசுரங்களையும் வினியோகித்தனர்.

இதில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், கல்வி அதிகாரிகள், புத்திஜீவிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கோட்டகலை கிறிஸ்லஸ்பாம் கே.ஜி.கே பாதை மக்கள் பாவனைக்கு கையளிப்பு

**(க.கிஷாந்தன்)**

கொட்டகலை பிரதேசசபைக்குட்பட்ட கிறிஸ்லஸ்பாம் கே.ஜி.கே பாதை காபட் இடப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

கொட்டகலை - அட்டன் பிரதான வீதியில் இருந்து உள்ளே செல்லும் கிறிஸ்லஸ்பாம் கே.ஜி.கே பாதையானது கடந்த வருடம் புணரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது. 4.45 கிலோமீற்றர் பாதையானது 80 மில்லியன் ரூபா செலவில் புணரமைக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தோட்ட வீடமைப்பு, சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதியாக கலந்துக் கொண்டு பாதையினை மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி இராமேஸ்வரன், முன்னார் மத்திய மகாணசபை உறுப்பினர்கள் கணபதி கனகராஜ், அருளானந்தம் பிலிப்குமார் மற்றும் கொட்டகலை பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்துக் கொண்டனர்.




Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245



Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

## ஓய்வுபெற்ற அதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.சபேசன்)

மோட்டார் சைக்கிளில் சென்ற ஓய்வுபெற்ற அதிபர் மீது பேருந்து மோதியதில் நொச்சிமுனையினைச் சேர்ந்த சி.சிவநேசதுரை வயது 70 பலியான சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்;

கடந்த 23 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து புறப்பட்டு தனது சுயதேவைக்காக மட்டக்களப்பு பிரதான வீதியினுடாக தனது மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பின்னோக்கிவந்த இலங்கைப் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து மோதிக்கொண்டதினால் குறித்த நபர் ஸ்தலத்திலேயே படுகாயம் அடைந்துள்ளார்.

காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். என பொலீசாரின் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதவான்நீதிமன்றபதில் நீதவான் அவர்களுடைய உத்தரவுக்கு அமைவாக காத்தான்குடி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுமணிமாறன் சடலத்தைப் பார்வையிட்டதுடன் உடல் கூற்று பரிசோதனையினைச் செய்யுமாறு பொலிஸாரை வேண்டியுள்ளார் மேலதிய விசாரணையினை காத்தான்குடிப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறையிலடைக்கப்பட்டு பின் விடுதலை பெற்ற ரிசாத்துக்கு திருகோணமலையில் அமோக வரவேற்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



ஆறு மாத காலமாக சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையின் பின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் திருகோணமலை மாவட்டத்துக்கு முதன் முறையாக விஜயம் செய்தார்.

குறித்த விஜயமானது நேற்று முன்தினம் (06)இடம் பெற்றதுடன் மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார் இதன் போது மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். முன்னாள் பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல் மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற இம் மக்கள் சந்திப்பில் கந்தளாய், முள்ளிப்பொத்தானை, புல்மோட்டை, புடவைக்கட்டு, குச்சவெளி, இறக்கக்கண்டி, மூதூர், தோப்பூர், கிண்ணியா பகுதி மக்கள் றிசாதை உற்சாகவரவேற்பளித்ததுடன் பள்ளிவாயல்களில் விசேட துஆ பிரார்த்தனையும் இடம் பெற்றது.

## செங்கலடியில் பல மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்துவைப்பு





'சுபீட்ச பாதைப் புரட்டு' தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட 1,500 வீதிகளை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றைய தினம் நாடுபூராகவும் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கம் கொள்கை பிரகனடத்திற்கு அமைவாக100,000 கிலோமீற்றர் வீதிகளை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வேலைகளைபூர்த்தி செய்த 1500 வீதிகளை ஒரே நாளில் திறந்து மக்கள் உரிமையாக்குதல் செயற்பாடானது இன்று நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைவாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல வீதிகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், தமிழ் பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்களின் பிரதித் தலைவருமான பரமசிவம் சந்திரகுமார் அவர்களின் சிபாரிசுக்கு இணங்க ரூபா 361 மில்லியன் செலவில் செப்பனிடப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், தமிழ் பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்களின் பிரதித் தலைவருமான பரமசிவம் சந்திரகுமார் கலந்துகொண்டு குறித்த வீதிகளை மக்கள் பாவனைக்காக திறந்து வைத்துள்ளார்.

இதன்போது கட்சியின் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரசதிணைக்களங்களின் அதிகாரிகளும் கிராம மக்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

## மட்டு.மாவட்டத்தில் கொட்டும் மழையிலும் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பில் பெருமளவு கசிப்பு மீட்பு

(ரீ.எல்.ஜவ்பர்கான்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழைக்கு மத்தியிலும் நேற்று மாலை பாரிய கசிப்பு கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று மாலை 8 மணியளவில் கடும் மழைக்கு மத்தியிலும் கொக்கொட்டிச்சோலை சந்திமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரிய கசிப்பு உற்பத்தி நிலைய முற்றுகையின்போது 135000 மில்லி லீற்றர் கசிப்பு 630000 மில்லி லீற்றர் கோடா மற்றும் இருபரள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடாத்தி வந்த மூவர் தப்பழயோடி விட்டதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## பட்டிப்பளை பிரதேச மக்களுக்கான விதைப்பொதிகளை வழங்கி வைத்தார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டமிடலுக்கு அமைய விதை பொதிகள் வழங்கும் நிகழ்வு மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உழுந்து மற்றும் பயறு பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் குறித்த விதை பொதிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் உழுந்து விதை பொதிகள் 213 பயனாளர்களுக்கும், பயறு விதை பொதிகள் 230 பயனாளர்களுக்கும், இஞ்சி கிழங்கு பொதிகள் 08 பயனாளிகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்ட குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி. தட்சணகௌரி தினேஷ், மண்முனை தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.புஸ்பலிங்கம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேளாண்மை விதைப்பை தொடர்ந்து காடுகளை நோக்கி திரும்பும் யானை கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு, பகுதியை தினமும் மாலை யானை கூட்டம் ஒன்று ஆக்கிரமிப்பு செய்து வருகின்றதுடன் வேளாண்மை விதைப்பை தொடர்ந்து காடுகளை நோக்கி திரும்புகிறது. திடிரென அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பகுதியை ஊடறுத்து செல்லும் பிரதான வீதியின் ஊடாக நிந்தவூர் மற்றும் காரைதீவு பகுதியின் வீதியின் ஒரு மருங்கில் குறித்த யானைகள் உலா வருகின்றன.

சுமார் பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 100 க்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்துள்ளன.

எனினும் வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ளமையினால் மீண்டும் காடுகளை நோக்கி படையடுத்துள்ளதை அவதானிக்க முடிந்தது. மேலும் அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் உள்ள வைக்கோல்களுக்கு தீ வைப்பதனாலும் ஊருக்குள் யனைகள் சென்று தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன் இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

இதனால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் அவ்விடத்தில் அதிகளவாக குவிந்துள்ளனர். மேலும் இப் பிரதேசத்தில் தினந்தோறும் வயல்வெளிகளில் உள்ள வைக்கோல்களுக்கு தீ வைப்பதனாலும் காட்டில் உள்ள யானைகள் வெளிவந்த நிலையில் அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பதவி நீக்கப்பட்ட செய்தி உத்தியோகபூர்வமற்ற செய்தி



### கலீலுர் ரஹ்மான்

(மாளிகைக்காடு நிருபர்)

முஸ்லிம் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் எந்த ஓர் உறுப்பினரையும் மற்றுமொரு உறுப்பினரால் பதிவி நீக்க முடியாது என்பது மரபாகும். எனவே ஒரே நாடு ஒரே சட்டம்என்ற ஜனாதிபதி செயலணியில் நானும் ஓர் உறுப்பினராக பதவி வகிப்பதன் காரணத்தால் நான் பதிவி நீக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் உறுப்பினரொருவர் ஏனைய உறுப்பினர்களின் பெயர்களையும் பயன்படுத்தி வெளியிடப்பட்டுள்ள செய்தி உத்தியோகபூர்வமற்ற செய்தி என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முஸ்லிம் ஒன்றியத்தின் பொருளாளருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும்,

கொழும்பு மாநகரசபையின் முஸ்லிம் ஒன்றியத்தின் உறுப்பினர் பதவியில் இருந்தும் அதன் பொருளாளர் பதவியில் இருந்தும் நான் நீக்கப்பட்டுள்ளதாக செய்தி ஒன்று பரவி வருகிறது. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசினின் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம்என்ற ஜனாதிபதி செயலணியில் நானும் ஓர் உறுப்பினராக பதவி வகிப்பதன் காரணத்தால் தாமாகவே முன்வந்து பதவி விலகாமையினால் ஒன்றியத்தின் உறுப்பினர் பதவியில் இருந்தும் அதன் பொருளாளர் பதவியில் இருந்தும் நான் நீக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

கொழும்பு மாநகரசபை முஸ்லிம் ஒன்றியத்தின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அதன் பொருளாளர் பொறுப்பில் இருந்தும் நான் நீக்கப்பட்டுள்ளதாக மாநகர சபையின் உறுப்பினர் ஒருவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக முஸ்லிம் ஒன்றியத்தின் தலைவர் உட்பட 16 உறுப்பினர்களையும் தொடர்பு கொண்டு நான் கேட்ட போது அவ்வாறான எந்த நடவடிக்கையையும் தாம் எடுக்கவில்லை என்றும் அது பற்றிய கலந்துரையாடல்கள் எங்கும் இடம் பெறவில்லையென்றும் திட்டவட்டமாக உறுதிப்படுத்தினார்கள் என அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வவுணதீவில் பல மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட வீதி சந்திரகாந்தனால் திறந்துவைப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சுபீட்ச பாதைப் புரட்டு தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட 1,500 வீதிகளை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வுகள் நாடுபூராகவும் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கம் கொள்கை பிரகனடத்திற்கு அமைவாக 100,000 கிலோமீற்றர் வீதிகளை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வேலைகளை பூர்த்தி செய்த 1500 வீதிகளை ஒரே நாளில் திறந்து மக்கள் உரிமையாக்குதல் செயற்பாடானது இன்று நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைவாக மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நரிப்புல்தோட்டம் பள்ளச்சேனை பகுதியில் வீதி பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசில் அமைக்கப்பட்ட இரண்டு கிலோமீட்டர் நீளமான கொங்கிறிட் வீதி இன்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

49 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த வீதியானது மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கிராமிய குழுக்களான நரிப்புல்தோட்டம் மற்றும் ஆயித்தியமலை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன், மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்



# திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களின் ஊடக இல்லம் உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பு














MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் ஹஸ்பர் ஏ ஹலீம், அச்சுதன்)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சமூகத்தின் ஊடக இல்லம் திருகோணமலையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப் பட்டது.

சனிக்கிழமை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சமூகத்தின் தவிசாளர் மங்கலநாத் லியனாராச்சி அவர்களின் தலைமையில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்சமன்தர்ஷனபாண்டிகோரள அவர்களினால் மத அனுஷ்டானங்களுடன் திறந்து வைக்கப்பட்டது.

இவ் ஊடக இல்லம் திருகோணமலை நகரின் மத்தியில் பிரதான பேருந்து நிலைய கட்டிட தொகுதியில் திறந்துவைக்கப்பட்டது இவ் ஊடக இல்லத்தினை திறந்து வைத்து அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரள இதன்போது இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு ஊடகவியலாளர்களின் பங்களிப்பும் முக்கியமானது மேலும் நாட்டில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் மக்களின் கீழ்மட்ட பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்களுக்கான இவ் ஊடக இல்லத்தினை திறந்து வைப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சில ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் இருக்கின்றன சமூகத்திற்கு உண்மை நிலவரத்தை சரியான முறையில் கொண்டு செல்வதில்லை அந்த வகையில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களை எடுத்துக்கொண்டால் ஏதேனும் குறைபாடுகள் அல்லது முறைப்பாடுகளை சமூகத்திற்கு உரிய முறையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் சிலவேளைகளில் எங்களையும் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப் பட்டதா என்ன தீர விசாரித்து செவ்வனே தமது ஊடக தர்மத்தினை நிலைநாட்டுவதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அந்த வகையில் இன்றைய கால கட்டத்தில் நவீன தொழில்நுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கின்றது இந்த ஊடக இல்லத்தை பார்க்கும்போது அவ்வாறான சில உபகரண குறைபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிந்தது அதனடிப்படையில் ஆரம்ப கட்டமாக இந்த திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்திற்கு கணினி வசதி மற்றும் இணைய வசதியினை பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும் திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்திற்கான சிறிய அளவிலான சொந்த நிலத்தினையும், சொந்த இல்லறமற்ற ஊடக வியலாளர்களுக்கான நிலப்பிரச்சினையினையும் தீர்த்து வைப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றிணையும் முன்னெடுத்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தெரிவித்தார் மேலும் இன்றைய தினம் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களின் உத்தியோகபூர்வ டிஷர்ட்டுகளும் இதன்போது பகிர்ந்தளிக்கப்பட்டது

மேலும் இவ் ஊடக இல்ல விழாவில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு அமைப்பின் அங்கத்தவர்கள் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சமூகத்தின் தவிசாளர் மங்கலநாத் லியனாராச்சி, செயலாளர் ஏ,ஜே.எம்,சாலி பொருளாளர் சி,சசிகுமார் மற்றும் ஊடக சமூகத்தின் ஊடகவியலாளர்கள் சமய தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு.
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT
Maestro




# 'உலக முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆற்றலை மேம்படுத்துவதே நோக்கம்'




(வி.ரி.சகாதேவராஜா)

உலகெங்கனும் வாழும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்தவென ஆரம்பிக்கப்பட்டதே 'பென்கிளப்' என்ற டிஜிடல் அமைப்பு. முஸ்லீம் பெண்களின் படைப்புகளை தொகுத்து வெளியிடுவதும் அடுத்த நோக்கம். அதன் பிரதிபலிப்பாக வரவிருப்பதே 'சுட்டு விரல்' என்ற கவிதைத்தொகுப்பு நூலாகும்.

இவ்வாறு சாய்ந்தமருதில் இடம்பெற்ற அறிமுகநிகழ்வில் உரையாற்றிய 'பென் கிளப்' ஸ்தாபிதத்தலைவர் கவிதாயினி மஷூறா ஏ மஜீட் தெரிவித்தார்.

பென்கிளப் அமைப்பு வெளியிடவிருக்கின்ற 'சுட்டுவிரல்' கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா தொடர்பான முதல் அமர்வு சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமையன்று தலைவி மஷூறா தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக உபதலைவியும் அல்ஹிலால் பிரதிஅதிபருமான கவிதாயினி முஜாமலா வரவேற்புரை நிகழ்த்த செயலாளர் கவிதாயினி வானம்பாடி றிப்காஅன்சார் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

அங்கு ஆலோசனைக்காக அழைக்கப்பட்டிருந்த அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தௌபீக், உதவிக்கல்விப்பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

அங்கு தலைவி மஷூறா மேலும் உரையாற்றுகையில்:

தற்போது உலகளாவியரீதியில் 145முஸ்லிம் பெண்எழுத்தாளர்கள் எமது அமைப்பில் உறுப்பினராகவுள்ளனர். முஸ்லிம் பெண் எழுத்தாளர்களது ஆற்றலுக்கான களங்களை களங்களை வியாபித்துக்கொள்ள வழிகாட்டுவது.கலாசாரத்தினூடாக கலையிலக்கியங்களைக் கட்டியெழுப்புவது.

இலைமறை காயாக விருக்கும் முஸ்லீம் பெண் எழுத்தாளர்களை படைப்புலகிற்கு கொண்டு வருவது. எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் அமைப்பினை வியாபிப்பது.

அவசியமான கலையிலக்கிய நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் தேர்ச்சியடையும் பொருட்டு பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறை நடத்துவது.இஸ்லாத்தில் பெண் உரிமை பற்றிய அறிவை அங்கத்தவர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படுத்துவது.இலக்கியத்திற்கு மேலதிகமாக எதிர்காலத்திலா கவின்கலைகளின் வளர்ச்சிக்கும் உழைப்பது.

இவ்வாறான நோக்கங்களைக்கொண்ட நாம் முகநூல் செயலியில் பலவித படைப்புகளை தினமும் படைத்துவருகிறோம். ஆதரவு தாருங்கள் என்றார்.

# இந்த அரசு வீழ்வது நிச்சயம்

## எம்.பி.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

இந்த அரசு வீழ்வது நிச்சயம். அடுத்த தேர்தலில் சிறப்பானதொரு அரசை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில்

நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பளம் இன்னும் முறையாக - முழுமையாக கிடைக்கவில்லை. சம்பளப் பிரச்சினை ஒருபுறம். மறுபுறத்தில் விலையேற்றம் என்ற தாங்க முடியாத சுமை.

சமையல் எரிவாயு, பால்மா மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன. இதனால் வாழ்க்கைசுமையும் அதிகரித்துள்ளது.

ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் என அனைவரும் இன்று வீதிக்கு இறங்கிவிட்டனர். யார் வேண்டுமானாலும் எப்படியும் பொருட்களை விற்கலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்த ஆட்சி வீழ்வது உறுதி. நல்லதொரு அரசை உருவாக்க மக்கள் அடுத்த தேர்தலுக்கு தயாராக வேண்டும்- என்றார்.

# மக்கள் எழுச்சி மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும்

## எம்.பி திகாம்பரம் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மக்கள் எழுச்சி மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் பிரேமதாச தலைமையில் மக்களுக்கான தொரு அரசு உருவாகும்- என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் இன்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பொய்யுரைத்து அதன்மூலம் ஆட்சியை முன்னெடுப்பதற்கே இந்த அரசு முயற்சிக்கின்றது. இன்று பொய் கூறுவதில் சிறப்பு தேர்ச்சியும் பெற்றுள்ளது.

நாட்டு மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத வகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால்தான் மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றனர். மக்கள் போராட்டங்கள்மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் தலைமையில் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசொன்றை நாம் உருவாக்குவோம்.

சேதன பசளை திட்டத்தை ஒரே நாளில் செயற்படுத்தவிட முடியாது. அதற்கு நீண்டகால திட்டம் வேண்டும். ஒரே தடவையில் செய்வதற்கு முற்பட்டதால் தான் இன்று விவசாயிகள் போராடுகின்றனர். இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு உடனடியாக உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

# கடுக்காமுனையில் இடைப்போக நெல் அறுவடை விழா




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு கடுக்காமுனையில் மூன்றாம் போக நெல் அறுவடை விழா கடுக்காமுனை கமநல அமைப்பின் தலைவர் தி.ருதாகரன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

கடுக்காமுனை வில்லுக்குளத்து நீரனை பயன்படுத்தி இடைப் போகத்தினை மேற்கொள்வதற்கு இப்பகுதி விவசாயிகளுக்கான அனுமதியினை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பெற்றுக்கொடுத்தமையினைத் தொடர்ந்து இம்முறை 95 ஏக்கர் செய்கை பண்னப்பட்டமையினால் அப்பகுதியை சேர்ந்த 63 விவசாய குடும்பங்கள் நன்மையடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் செய்கைபண்னப்பட்ட வயல்களை அறுவடை செய்யும் விழாவிற்கு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், அறுவடையினையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

குறித்த அறுவடை விழாவிற்கு சிறப்பு அதிதிகளாக மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சி.புஸ்பலிங்கம், பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திர மோகன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் வீ.ராஜகோபாலசிங்கம், பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணகௌரி தினேஸ், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலயங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முற்போக்கு தமிழ் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி குழுக்கூட்டம்:





2021 க்கான இரண்டாவது சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார் மற்றும் தொழில் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் பெண்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.அதன் போதான படங்கள்.

படங்கள்: காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மூதூர் லிங்கபுரம் ஆதியம் மன் கேணி எவெரெஸ்ட் விளையாட்டு கழகத்தினால் தேசிய ஜனநாயக கட்சியிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இனங்க கடின பந்து மற்றும் துடுப்பாட்ட மட்டை வழங்கி வைக்கப்பட்டது.

பின்தங்கப்பட்ட கிராமத்தில் வசிப்பதனால் தங்களுக்கு எந்தவிதமான நிறுவனம் மூலமாகவோ, அரசாங்க தரப்பு மூலமாகவோ, அரசியல் கட்சிகள் சார்பாக எவ்விதமான உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை என்பதனையும் கடினப் பந்து பயிற்சியை மேற்கொள்ள ஆர்வம் இருந்த பொழுதிலும் பின்தங்கிய கிராமத்தில் வசிப்பதனால் அதற்குரிய உபகரணங்களை எம்மால் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் நாம் இருந்தோம்.

கிராமத்திற்கு வருகை தந்த தேசிய ஜனநாயக கட்சியின் தலைவர் கிரிசான் குமார் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்

# கிண்ணியா மற்றும் இறக்காமத்திலும் கொரோனா உடல்களை அடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடலங்களை கிண்ணியா, இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்ய அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக மன்றத்தின் செயலாளர் ஏ.எம்.ஆஷிப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்ட துரதிஷ்டமான நடவடிக்கைக்கு எதிரான போராட்டங்களையடுத்து, இவ்வாறான ஜனாஸாக்களை அடக்குவதற்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதுடன் அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, மஜ்மா நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அன்று தொடக்கம் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் மாத்திரமல்லாமல் இந்து, பௌத்தர், கிறிஸ்தவர் உள்ளிட்ட அனைத்து இனத்தவரினதும் உடல்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை அங்கு சுமார் 3200 உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் அங்கு இன்னும் சுமார் 200 உடல்கள் வரையே அடக்கம் செய்ய முடியும் எனவும் ஓட்டமாவடி பிரதேச சபை அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து மயானங்களுக்கும் முன்மாதிரியான ஒரு மையவாடியாக மஜ்மா நகர் திழ்கிறது. மயானங்கள் அனைத்தும் தனித்தனி இனங்களுக்கென இருக்கும்போது கொரோனா உடல்களுக்காக தெரிவு செய்யப்பட மஜ்மா நகர் மையவாடி மாத்திரம் அனைத்து இன, மதங்களுக்குமான ஒற்றுமை மயானம் என்ற பெயரை பெற்றிருக்கிறது.

எவ்வாறாயினும் தற்போது அந்த மையவாடியில் அடக்கம் செய்வதற்கான நிலம் முடிவுறும் நிலைக்கு வந்திருப்பதால் ஏற்கனவே கொவிட் ஜனாஸாக்களை அடக்குவதற்காக தெரிவு செய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா மற்றும் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் ஏனைய மாகாணங்களிலும் மாவட்டம் தோறும் இதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அக்கடிதங்களில் வலியுறுத்திக் கேட்டுள்ளோம்- என்று மேலும் குறிப்பிட்டார்.

# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு கனடாவிலிருந்து அன்பளிப்பு


(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மாட்டுப்பளை ஸ்ரீ மீனாட்சிஅம்மனின் புதிய ஆலய முகப்பு பிரதான அம்மன் திருவுருவச்சிலையை நிருமாணிக்க கனடாவிலிருந்து அம்மன்பக்தர் ஒருவர் நிதி அன்பளிப்பு செய்துள்ளார்.

நீண்டகாலத்திற்குப்பிறகு புதிய தலைவர் கி.ஜெயசிறிலின் வருகையைத்தொடர்ந்து, ஆலய புனருத்தாபனப்பணிகள் கிரமமாக இடம்பெற்றுவருகின்றமையை அவதானித்த அவர் அம்மன் சிலைக்காக 1லட்சம் ருபாவை வழங்கினார்.

கனடாவில் வாழும் பரோபகாரி அசோகன் தனது மகள் அக்சிதாவின் பெயரில் வழங்கிய இவ்வன்பளிப்பை, காரைதீவிலுள்ள தனது உறவு திருமதி கீதா.ஜெயசிறில் நேற்று ஆலய சந்நிதானத்தில் ஆலய நிருவாகத்திடம் கையளித்தார்.

கனடா பரோபகாரி திரு.அசோகன் கடந்த கொரோனாகாலகட்டத்தில் லட்சக்கணக்கான நிதியை வழங்கியதோடு, புலம்பெயர்தேசங்களிலிருந்து ஏனையவர்களிடமிருந்தும் நிதியுதவி வழங்கிபெற்று தாயகஉறவுகளின் பசியைபோக்கியவராவார்.



ஆலயவளாகத்தில் நிருமாணிக்கப்பட்டுள்ள புதிய மீனாட்சிஅம்மனாலயத்தின் மகாகும்பாபிசேகத்தையொட்டி திருப்பணிகள் மிகவேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமகாலத்தில் பரவலாக அம்மன் பக்தர்கள் தத்தமது காணிக்கைளை செலுத்திவருகின்றனர்.

# இன்று சாதாரணதர உயர்தர வகுப்புகளுள்ள பாடசாலைகள் ஆரம்பம்

## மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதி பற்றி பெற்றோர்கள் அறிவார்களா?



கொரோனாவால் இழந்த கல்வியை மீட்க அரசாங்கம் பல வகையான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி படிப்படியாக நான்குகட்டங்களாக பாடசாலைகளை திறந்துவருகிறது.

அதன்படி மூன்றாம்கட்டமாக இன்று 8ஆம் திகதி தரம் 10, 11, 12, 13ஆகிய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டுவருகிறது.

க.பொ.த சாதாரண தரத்தின் முதல்வருடம் என அழைக்கப்படும் தரம் 10, சாதாரணதரத்தின் இரண்டாம் வருடம் என அழைக்கப்டும் தரம் 11 மற்றும் உயர்தர 1ஆம் 2ஆம் வருட மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

நான்காம் கட்டமாக தரம் 6முதல் தரம் 9வரையான மாணவர்களை எப்போது அழைப்பது என்பதை இன்னும் கல்வியமைச்சு வெளியிடவில்லை. எனினும் அதுவும் அடுத்தவாரம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

ஏலவே ,ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கான சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டு எவ்வித விக்கினமுமின்றி வெற்றிகரமாக பூரண அதிபர் ,ஆசிரியர் ,மாணவர் வரவுகளுடன் நடைபெற்றுவருகின்றன.

இவ்வாறு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுவருகையில், தமது பிள்ளைகளுக்கு உரிய சுரக்ஷத காப்புறுதி பற்றி பெற்றோர்கள் நன்கு அறிந்துவைத்திருக்க வேண்டியதவசியம். உதாரணமாக கொரோனா தனிமைப்படுத்தல் தொடக்கம் வைத்தியசாலை செலவுக்கும் கூட இச் சுரக்ஷா காப்புறுதி உதவிசெய்கிறது. இதனை அவர்கள் அறிவார்களா?

பெற்றோர் கட்டாயம் அறிந்திருக்கவேண்டிய 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதி பற்றிய சில தெளிவுகள்.

பாடசாலையில் தரம் 113 வரை கற்கின்ற மாணவர்கள் அனைவரும் சுரக்ஷா காப்புறுதி பெற உரித்துடையவர்கள்.

மூன்று தொகுதிகளாக இது வழங்கப்படுகிறது.

1.சுகாதார காப்புறுதி 2.விபத்துக் காப்புறுதி 3.ஆயுள் காப்புறுதி



### வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுதல்

பணம் கட்டும் அரச வைத்தியசாலையில் அல்லது தனியார் வைத்தியசாலையில் மாணவர் தங்கி சிகிச்சை பெறும்போது ஒரு நாளைக்கு ரூபா. 12500.00 என்ற அடிப்படையில் 2 லட்சம் வரை காப்புறுதி வழங்கப்படுகிறது.

பணம் கட்டாத அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் போது ஒரு இரவுக்கு ரூபா.1000.00 என்ற அடிப்படையில் குறித்த மாணவருக்கு காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல் குறித்த நோய்க்கான சிகிச்சை இலங்கையில் இல்லாத போது வைத்திய ஆலோசனைப்படி வெளிநாடு செல்வதாக இருந்தால் வெளிநாட்டு சிகிச்சைக்கான செலவும் காப்புறுதியில் குறித்த மாணவனுக்கு வழங்கப்படுகிறது.

வைத்தியசாலையில் தங்காது வெளி வாரியாக சிகிச்சை பெறும்போது சிகிச்சை பெறுவதற்கான கொடுப்பனவு ரூ.10000.00 ஆகும்.

MRI scan, CT scan ,EEG ,DMSA scan, DTPA scan, Ultrasound scan போன்றவற்றை செய்வதற்கு ஏற்படும் செலவுகளையும் காப்புறுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

பற்களில் இடைவெளி நிரப்புவதற்கு அல்லது கழற்றுவதற்கு ஏற்படக்கூடிய செலவுகளையும் பெறலாம்.

கை ,கால் உடைந்துள்ள நிலையில் ஆயுர்வேத சிகிச்சை பெறினும் அதற்கும் கொடுப்பனவு பெறலாம்.

கண்ணாடி எடுப்பதற்கும்இ காது கேட்பதில் குறைபாடு உள்ளவர்கள் அதற்கு உரிய உபகரணத்தை எடுப்பதற்காகவும் காப்புறுதி பணத்தைப் பெறலாம்.

கடுமையான நோய்களின் போது. இருதய சத்திர சிகிச்சை, புற்றுநோய் ,சிறுநீரகப் பிரச்சினைகள், தலசீமியா, செயற்கையான கை,கால்கள் கொள்வனவு செய்தல், ஈரல் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள் போன்றவற்றின் போது இரண்டு லட்சம் முதல் 15 லட்சம் வரை காப்புறுதித் தொகை பெறலாம்.

### திடீர் விபத்துக் காப்புறுதி

திடீர் விபத்துக்களின் மூலம் முழுமையாக பாதிக்கப்பட்டு ,ஆயுள் முழுதும் அங்கவீன மாணவர்களுக்காக (உதாரணமாக இரண்டு கண்ணும் தெரியாமல் போதல் ,இரண்டு காதுகளும் கேட்காமல் போகுதல் )இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

அதேபோல் ஒரு கண் தெரியாமல் போதல் ஒரு காது கேட்காமல் போதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் முதல் 2 லட்சம் வரை காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது.,

### தற்காலிக அங்கவீனம்

விபத்துக்களின் மூலம் தற்காலிகமாக அங்கவீனம் அடைந்து (அதாவது கை,கால் உடைந்து)

பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியரிடம் வைத்தியம் செய்து கொண்டு வீட்டில் இருந்தாலும்,

2 வாரம் முதல் 1 மாதம் வரை காலத்திற்கு ரூபா 25000.00

1 மாதம் முதல் 2 மாதம் வரை ரூபா. 50000.00

இரண்டு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு ரூபா 100000.00 காப்புறுதி வழங்கப்படுகிறது.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

### தாய் அல்லது தந்தையின் இறப்பு

தாய் அல்லது தந்தை இறக்கின்ற நிலையில் அக்குடும்பத்தின் வருமானம் வருடாந்தம் ரூபா 180000.00 ஐ விட குறைவாக இருந்தால் (வருமானத்தை கிராம சேவகரும்,பிரதேச செய லாளரும் உறுதிப்படுத்த வேண்டும்) பாடசாலையில் கற்கும் ஒரு பிள்ளைக்கு இரண்டு லட்சம் ரூபா வீதம் மொத்தமாக 6 லட்சம் வரை காப்புறுதி வழங்கப்படுகிறது. பிள்ளையின் வங்கிக் கணக்கிற்கு தொகை அனுப்பப்படும்.

பிள்ளையின் மரணத்தின்போது எந்த ஒரு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படமாட்டாது.

### குறிப்புகள்

எந்த ஒரு நிகழ்வின் பின்னும் 90நாட்களுக்குள் இது தொடர்பான அனைத்துப் படிவங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 90 நாட்கள் கடந்த எந்தப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இது போன்ற நிகழ்வுகளின் போது, பாடசாலையிலிருந்து இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமையாக நிரப்பி, அதில் குறிப்பிடப்படும் அனைத்து ஆவணங்களையும் சேர்த்து, அதிபர் அத்தாட்சிப் படுத்திய தன்பின்பு அருகிலுள்ள ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மாறாக கோட்டக்கல்வி காரியாலயத்திற்கு அல்லது வலயக் கல்வி காரியாலயத்துக்கு அல்லது கல்வி அமைச்சுக்கு இவற்றை அனுப்பக் கூடாது.

2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் யோசனையாக முன்வைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இந்த சுரக்ஷா காப்புறுதியின் பலன்களை எமது பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுக்க அனைவரும் முயற்சிப்போம்.

**(கல்வி அமைச்சின் 2019.04.11ம் திகதிம் 24/2019 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கையை செல்லுபடியற்ற தாக்கி வெளியிடப்பட்ட 2021.03.01 திகதியும் 04 /2021 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கையை அடிப்படையாக வைத்து இது தொகுக்கப்பட்டது. 2020.12.02 முதல் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது)**





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# மன்னாரில் சமூகத்திலிருந்து கோரோனா தோற்றாளர்களை கண்டறிய சுகாதார சேவையாளர்கள் வீதிகளில்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று தற்பொழுது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து நோயாளர்களை சமூகத்திலிருந்து கண்டறிவதற்காக மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களம் மீண்டும் வீதிகளில் இறங்கி பி.சீ.ஆர் மற்றும் ஆன்டிஜென் பரிசோதனைகளை ஆரம்பிக்க தொடங்கியுள்ளது.

கடந்த காலங்களில் நிலவி வந்த கொரோனா தொற்றில் மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களம் ஒன்றிணைந்த வேலைத் திட்டத்தின் காரணமாக மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களைவிட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் மரணத்திலும் மிக குறைவாகவே காணப்பட்டு வந்தது.

ஆனால் கொரோனா தொடர்பாக அரசு முன்பு கடைப்பிடித்து வந்த மக்களின் வாழ்க்கையின் இயல்பு நிலையில் தளர்வை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து தற்பொழுது மன்னார் மக்களும் சுகாதார நடைமுறைகளி



லிருந்து தளர்ச்சி அடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மன்னாரில் தற்பொழுது நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து வீதிகளில் சுகாதார சேவையாளர்கள் இறங்கி நோயாளர்களை சமூகத்தில் கண்டறிந்து தனிமைப்படுத்த மீண்டும் பி.சீ.ஆர். மற்றும் ஆன்டிஜென் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளனர். சனிக்கிழமை நானாட்டான் சுகாதார அதிகாரி பிரிவில் முதல்நாள் வீதியில் மேற்கொண்ட பரிசோதனையில் முதல் 50 பரிசோதனைகளில் 06 பேர் தொற்றுடன் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஏனைய சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளிலும் இவ்வாறான பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருவாட்டுக்கடையை நாசமாக்கிய விசமிகள் மனிதாபிமானம் மருவிச் செல்கின்றதா?



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று சாகாம வீதி அர்ச்சனா திரையரங்கின் முன்னால் அமைந்திருந்த சிறிய கருவாட்டுக்கடை ஒன்றினை நேற்றிரவு நாசமாக்கிய சில விசமிகள் அங்கிருந்த பெறுமதியான தராசு ஒன்றினையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு பலத்த மழை பெய்த நேரம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் கடையின் உரிமையாளர் இன்று பொலிசாரிடம் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.

குறித்த கடையானது சிறியதாக ஆரம்பிக்கப்பட்டு கடை உரிமையாளரின் முயற்சியால் சற்று பெரிதாக்கப்பட்டு சில நாட்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடையின் பின்புறத்தை உடைத்து உள்நுழைந்த கள்வர்கள் அங்கிருந்த கருவாடுகளை அருகில் இருந்த நீர்நிறைந்த வளவினுள் வீசி எறிந்துள்ளனர். பின்னர் அங்கிருந்த டிஜிட்டல் தராசினையும் எடுத்து சென்றுள்ளனர்.

இந்நடவடிக்கையினை பெரிதும் கண்டிக்கும் பிரதேச மக்கள் வளர்ந்துவரும் வியாபாரிகளுக்கு இச்செயற்பாடு பயத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் குறித்த கள்வர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேநேரம் அன்மைக்காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உதிரம் கொடுத்து உயிரை காக்கும் உன்னத பணியில்





(க.ருத்திரன்)

'உதிரம் கொடுத்து உயிரை காக்கும் உன்னத பணியில் இணைவோம்' என்ற தொணிப் பொருளில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நிமலன் செளந்தரநாயகம் அவர்களின் 21 ஆவது நினைவு நாளினை முன்னிட்டு இரத்ததான முகாம் இடம்பெற்றது.



மட்டக்களப்பு இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னனயின் ஏற்பாட்டில் அதன் தலைவர் லோ.தீபாகரன் தலைமையில் முறக்கொட்டான்சேனை கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், செங்கலடி பிரதேச சபை தவிசாளர்.சர்வானந்தன்.மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான கி.சேயோன், க.நல்லரெட்டனம், க.பகிதரன், யோகேஸ்வரன்,க.கமலநேசன். ஆகியோர்கள் கல்ந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியமன் ,வாலிபர் முன்னனி தலைவர் கி.சேயோன் ஆகியோர்களுடன் இணைந்து இளைஞர் யுவதிகளும் ஆர்வத்துடன் இரத்ததானம் செய்தனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நிமலன் செளந்தரநாயகம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இனம் தெரியாத நபர்களினால் மோட்டார் சைக்கிளில் வரும்போது கிரான் பிரதான வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

# போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் ரிதிதென்ன டிப்போவுக்கு விஜயம்





(ந.குகதர்சன்)

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு மாவட்டத்தில் உள்ள பல்வேறு போக்குவரத்து சாலைகளுக்கும் விஜயம் மேற்கொண்டு நிலவும் தேவைகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டார்.

இதன் போது மட்டக்களப்பு மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ரிதிதென்ன போக்குவரத்து சாலையை (சனிக்கிழமை) இரவு வாகரை பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.எம்.தாஹிரின் அழைப்பின் பேரில் வருகை தந்து பார்வையிட்டார். ரிதிதென்ன பஸ் சாலை தற்காலிகமாக மூடப்பட்டு வாழைச்சேனை சாலையுடன் இணைக்கப்பட்டள்ளதனால் ரிதிதென்ன சாலை மீண்டும் திறக்கப்பட்டு இயங்குவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சரிடம் பிரமுகர்களால் தெளிவுபடுத்தப்பட்டதுடன் ரிதிதென்ன சாலை எல்லைக் கிராம மக்களின் போக்குவரத்துக்கு மிகவும் உருதுணையாக செயற்பட்ட சாலை என்ற விடயமும் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

சகல விடயங்களையும் கேட்டறிந்து கொண்ட போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தற்காலிகமாக மூடப்பட்ட ரிதிதன்ன இலங்கை போக்குவரத்து சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தேவை காணப்படுவதாகவும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் உள்ளதால் உடனடியாக அபிவிருத்தி செய்து திறக்கமுடியாது என்றும் எதிர்காலத்தில் இதனை மீளவும் திறந்து இங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபையின் உறுப்பினர்களான ஏ.ஜி.அஸீஸ சுல் றஹீம், மௌலவி எம்.ஐ.ஹாமித் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல். அஸ்மி ரிதிதென்ன சாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஆட்டுப் பண்ணை கையளிப்பு





(எஸ். சதீஸ்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை வலுப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஐரேப்பிய யூனியனின் உதவியுடன், வீ எபக்ட் நிறுவனமும் காவியா பொண்கள் சுயதொழில் நிறுவனமும் இணைந்து கிரான்பிரதேசத்திலுள்ள பேரில்லாவெளி கிராமத்தில் அன்னம் சுயதொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு அச்சங்கத்திற்கு 32 ஆடுகள் கொண்ட ஆட்டுப்பண்ணை அமைத்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரால் குறித்த சுயதொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு சனிக்கிழமை பிற்பகல் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் புண்ணியமூர்த்தி சசிகலா, காவியா பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யோகமலர் அஜித்குமார் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் காவியா நிறுவன உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வின் போது காவியா நிறுவனமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகடும் இணைந்து வீதியோரங்கள் மற்றும் பொது இடங்களில் 200 மரக்கன்றுகளும் நடப்பட்டது.

வீ எபக்ட் நிறுவனமும் காவியா பொண்கள் சுயதொழில் நிறுவனமும் இணைந்து கிராமங்களில் சங்கங்கள், குழக்கள் அமைத்து கடந்த ஆறு (06) வருடங்களுக்கு மேலாக

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை வலுப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் கிரான், வாகரை , வவுணதீவு, மண்முனை வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்குடா முஸ்லிம் ஆசிரியர் அமைப்பின் 33 ஆவது வருட நிறைவு விழா








(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் 1988 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 22 ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் 33 ஆவது வருட நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை (7) மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

1988 இல் நியமனம் பெற்ற கல்குடா முஸ்லிம் ஆசிரியர் அமைப்பு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு அதன் தலைவர் எம்.எல்.எம்.சபூர் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன், இந்நிகழ்வில் விசேட அம்சமாக நிறைவு விழா கொண்டாடிய 43 ஆசிரியர்களின் படைப்புகள் மற்றும் கல்விப் பணிகள் தாங்கிய 'ஞாபகவெளி' எனும் நினைவு மலரொன்று வெளியிடப்பட்டதுடன், இவ் அமைப்பில் இருந்து மரணமடைந்த மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.புஹாரி மற்றும் ஆசிரியர் எம்.ஏ.நூர்தீன் ஆகியோர்கள் நினைவு கூறப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அஹ்ஸாப் மற்றும் ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம்.ஏ.காதர், எம்.சுபைர், எம்.எஸ்.கலீல் ரஹ்மான் ஆகியோர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை இந்துக்கல்லூரி மைதானத்தில் மரநடுகை..!

(அ . அச்சுதன்)

திருகோணமலையின் அளப்பெரிய ஆளுமையும், சைவப் பெரியாருமாகிய வடிவேல் ஐயாவின் சேவையினையும் மகத்துவத்தையும் கௌரவித்து நினைவுகூருமுகமாக அவர் ஆசிரியப் பணியாற்றிய திருகோணமலை இந்துக்கல்லூரி மைதானத்தில் ''எதிர்காலப் பசுமை உலகு'' அமைப்பினால் சனிக்கிழமை மர நடுகை நடைபெற்றது.

திருகோணமலையில் சைவத்திற்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றிய பண்டிதர் இ.வடிவேல் ஐயா அவர்களின் 14 வது ஆண்டு நினைவு நாள் ஆகும்.

திருகோணமலை நகரில் பசுமைப் புரட்சி செய்து சாதித்துவரும் இளையோர் அமைப்பான '' எதிர்காலப் பசுமை உலகு '' அமைப்பு இலங்கையின் பல்வேறுபகுதிகளிலும் மரங்களை நட்டுப் பேணி வருகின்றது. கடந்த 5 ஆண்டுகளில் திருகோணமலை நகரில் மட்டும் சுமார் 3000 இற்கு மேற்பட்ட மரங்களை நட்டு வளர்த்துச் சாதித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் ''நினைவுகளை மரங்களாக்குவோம் நிலையான வளமாக்குவோம்'' எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தி மக்களையும் இணைத்து மரம் நடுகை செய்து வருகின்றனர்.





அவ்வாறே திருகோணமலையின் ஆளுமைகளையும், பெரியோர்களையும் கௌரவித்து மரம்நட்டு எதிர்காலச் சந்ததிக்கு அவர்கள் சேவைகளை எடுத்துக்கூறுமுகமாகவும் ''ஆளுமைகளை நினைவுகூரும் அருமர நடுகை எனும் திட்டத்தையும் முன்னெடுத்து மரம் நடுகை செய்து வருகின்றர். அந்த வகையில் பண்டிதர் இ.வடிவேல் ஐயாவை நினைவுகூரும் மரத்தினை நட்டுவைத்தனர்.

இந்த நினைவு மரநடுகை நிகழ்வில் திருகோணமலை தென்கைலை ஆதீனத்தின் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார், திருத்தொண்டர் சபையின் தலைவரும் ஆன்மீக செயற்பாட்டளருமான திரு செல்வஜோதி அவர்கள், கோணேஸ்வரா வித்தியாலத்தின் முன்னாள் அதிபர். திரு. க.சிவபிரகாசம் அவர்கள், வடிவேல் ஐயாவின் உறவினர் திரு. ஜெயசங்கர் அவர்கள், இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.செ.பத்தசீலன் அவர்கள், தென்கைலை ஆதீனத்தின் இளைய பட்டம் அவர்கள், ஆசிரியர் திரு.சி.சசிகுமார் அவர்கள் மற்றும் பசுமை நணபர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் வடிவேல் ஐயாவின் நினைவுகளும், சேவைகளும் குறித்த, கடந்தகாலச்சம்பங்களையும் மேற்கோள்காட்டி வருகைதந்த பெரியோர் பேசியதுடன், இந்த நிகழ்வை முன்னெடுத்த எதிர்காலப் பசுமை உலகு அமைப்பினரையும் பாராட்டியிருந்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த திரு.க.துஷ்ந்தன் ( செயலாளர், எதிர்காலப் பசுமை உலகு) அவர்கள் குறிப்பிடுகையில், திருகோணமலையில் வடிவேல் ஐயாவினை எவரும் நினைவு கூராத நிலையில் எதிர்காலப் பசுமை உலகு நினைவு கூர்ந்ததையும், அது தமக்குக் கிடைத்த பெரும் வாய்பாகும் என்றார். சாதாரண மர நடுகை நிகழ்வு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நினைவு நிகழ்வாக மாறியிருப்பது மிக்க மகிழ்சி என்றும், இன்றைய தினம் நடுகை செய்த மரங்களுடன் இந்துக் கல்லூரி மைதானத்தில் 30 மரம் நட்டாகிவிட்டது என்றும் 125 மரம் நடும் பணி தொடர்கிறது என்று கூறியதுடன். வருகை தந்த பெரியோருக்கு நன்றியையும் தெரிவித்தார்.

அத்துடன் இந்நாள் மரத்தை நட்டிட வேண்டும் என நிகழ்வை ஏற்பாடு செய்த எதிர்காலப் பசுமை உலகு அமைப்பின் தலைவர் வைத்தியர் சி.சிஜேதரா மற்றும் மரநடுகைப் பணியினை முன்னெடுக்கும் அமைப்பின் உறுப்பினர் திரு.கீதன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# நிந்தவூர் சபீர் ஹமீட் சாமசிறி தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிப்பு

(நிந்தவூர் நிருபர்)

அம்பாரை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட ஆசிரியர் சபீர் ஹமீட் அவர்களுக்கு மனித உரிமைகள் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைப்பினால் ''-H-uma-n-i-ta-r-ian Ex-c-e-l-l-e-n-ce Awa-r-d-'' எனும் திட்டத்தின் கீழ் இலங்கையில் தேசிய ரீதியாக வழங்கப்படும் கௌரவ விருதான 'சாமசிறி தேச கீர்த்தி' விருது அண்மையில் (6) பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சாத்தியம் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியில் மௌலவி பட்டம் பெற்றவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான கற்கையில் விஷேட பட்டம் பெற்றவரும், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தில் 'மனித உரிமைகள் மற்றும் சமாதான துறையில் டிப்ளோமா கற்கையையும் , இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ' கல்வி துறையில் டிப்ளோமா' கற்கையையும் , சமாதான கற்கை நிலையத்தில் 'முரண்பாடு தீர்வும் சமாதான தயார்படுத்தலும்' டிப்ளோமா கற்கையையும், IB-MI Ge-rma-ny நிறுவனத்தில் 'சர்வதேச அரசியல்' சான்றிதழ் கற்கையையும், 'மனித வள முகாமைத்துவம் , தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் ஆகியவற்றில் டிப்ளோமா கற்கையையும் பூர்த்தி செய்த இவர் 05 க்கு மேற்பட்ட உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம் மற்றும் இஸ்லாம் ஆகிய நூல்களையும்



எழுதி கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்ற எழுத்தாளரும் ஆவார்.

தேசிய அளவில் உயர்தர மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானம் மற்றும் இஸ்லாம் ஆகிய ஆகிய பாடங்களைக் கற்பித்து வருகின்ற நாடறிந்த வளவாளராகவும், பிரபல அரசியல் விமர்சகராகவும், அம்பாரை மாவட்ட சமாதான நீதவானாகவும், நிந்தவூர் அனைத்து விளையாட்டு கழக சம்மேளனத்தின் செயலாளராகவும், நிந்தவூர் முத்தகீன் விளையாட்டு கழகத்தின் தலைவராகவும் நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராகவும் செயற்படும் இவர் மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பின் அம்பாரை மாவட்ட பிரதிநிதியும் ஆவார்.

இவ்வாறு பல்வேறு கல்வி தகைமைகளையும், பல சமூக சேவைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் இவர் இவ்விருதை பெற்றமை பாராட்டத்தக்கதாகும் என கல்விமான்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

# பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு மின்பிறப்பாகி கையளிப்பு

( வாஸ் கூஞ்ஞ)

பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு உலக வங்கியின் நிதியுதவி திட்டத்தின் கீழ் 60 கே.டபிள்யூ வலுவுடைய மின்பிறப்பாகி மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.வினோதன் பேசாலை வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி இம்மனுவேல் ஈற்றன் பீரிஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்பட்டுவரும் மின்சார தடையினால் பலர் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் வைத்தியசாலைகளும் இவ்வாறு பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மேற்கொண்ட நடவடிக்கையால் பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு சிறிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் உலக வங்கியின் நிதியுதவி திட்டத்தின் கீழ் 60 கே.டபிள்யூ வலுவுடைய மின்பிறப்பாகி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு இவ் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ.ஈற்றன் பீரிஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



பேசாலை மற்றும் சிலாவத்துறை வைத்தியசாலைகளை தளவைத்தியசாலைகளாக எதிர்காலத்தில் தரமுயர்த்தும் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த வலுக்கூடிய மின்பிறப்பிப்பாக்கி மாற்று மின் வலு தேவைப்படும் நேரத்தில் உபயோகிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் துறைமுகம் இயங்க நடவடிக்கை: இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

(எம்.ஐ.எம்.றியாஸ்)

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்திற்கு துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் விஜயம் செய்து துறைமுகத்தின் குறைபாடுகளை அதிகாரிகளிடம் கேட்டறிந்து கோண்டார்.

அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான டப்ளுயு.டி. .வீரசிங்கவின் வேண்டுதலின் பேரில் துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை (05.11.2021) மாலை ஒலுவில் மீன்பிடித்துறைமுகத்திற்கு வருகை தந்து துறைமுக அதிகாரிகளுடன் கலந்துரையாடி மீன்பிடித் துறைமுகத்தை செயற்படுவதில் உள்ள குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன் நேரடியாகவும் பார்வையிட்டும் தெரிந்து கொண்டார். ஒலுவில் துறைமுகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக உடனடியாக துறைமுகத்தின் உள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்தை இயங்கச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு துறைமுக அதிகாரிகளுக்கு இதன்போது துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உத்தரவு பிரப்பித்தார். துறைமுகத்தை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மீனவர்களுக்கு உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் ஒலுவில் பிரதேசத்தின் கடலரிப்பு விடயத்தினை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இப்பிரதேச மக்களின் தேவையினை நிவர்த்தி செய்வதோடு துறைமுகத்தில் மூடப்பட்டுள்ள மண்ணினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.



குறித்த ஓர் பகுதியில் மூடப்பட்டு இருக்கும் மணலினை அகற்றியெடுக்கும் பணிகளை உடன் முன்னெடுப்பதாகவும் குறைந்தது ஒரு தடவையில் மீனவர்களின் ஐந்து படகுகள் இங்கே உட்செல்வதற்கான பாதையினை ஏற்படுத்தி மீன்பிடித் தொழிலை செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் ஷாபீர், அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்தி இணைப்பாளர் ஆசிரியர் எஸ் எம் ஜெஸீல் மற்றும் துறைமுக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.


## அன்பான வாசகர்களுக்கு




இம்மாதம் தொடக்கம் சுபீட்சம் நிகழ்நிலைப்பத்திரிக்கை சிலவாரங்களுக்கு வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாத்திரமே வெளிவரும். உடனடிச்செய்திகளுக்கு www.supeedsam.com எனும் எமது செய்தித்தளத்துடன் இணைந்திருங்கள்


# கல்முனை பிரதேச இளைஞர்களுக்கான நல்லிணக்க பயிற்ச்சிப்பட்டறை!







(எம்.என்.எம்.அப்ராஸ் )

சமாதானம் மற்றும் சமூக பணி நிறுவனத்தினால் (PCA) அதன் அனுசரணையில் இயங்கி வரும் கல்முனை பிரதேச நல்லிணக்க மன்றங்ககளின் இளைஞர் குழு உறுப்பினர்களுக்கான நல்லிணக்க பயிற்ச்சிப்பட்டறை நிகழ்வு அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்றத்தின் இனைப்பாளர் எஸ்.எல்.ஏ.அஸீஸ் இணைப்பில் நேற்று கல்முனையில் நடைபெற்றது.

இதன் போது பிரதேச இளைஞர் மன்றங்களின் மூலம் சமூக ரீதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், அதன் முக்கியத்துவம் பற்றிய தெளிவூட்டல் ,நல்லிணக்கத்தை கொண்டு செல்வதற்க்கு மேற்க்கொள்ள வேண்டிய வழிமுறைகள் மற்றும் நல்லிணக்கத்தை சாவலுக்கு உட்படுத்தும் விடயங்கள் அதற்கான தீர்வுகள் பற்றி கலந்தோலாசிக்கப்பட்டு கருத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வளவாலர்களாக சமாதானம் மற்றும் சமூக பணி அமைப்பின் (PCA) முகாமையாளர் டி.இரஜந்திரன் , அரச சார்பற்ற நிறுவனங் களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ. எல். எம். இர்பான் , எம். எஸ். ஜெலீல், சமாதான சமூக பணி அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.ஏ.மாஜீத், பிரதேச இளைஞர் நல்லிணக்க மன்றங்ககளின் இணைப்பாளர்கள் துறை சார்ந்த இளைஞர்கள் ,யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.